தினமணி

**கத்திரி: இயற்கை உரத்தால் அமோக விளைச்சல்**

First Published : 24 Jun 2010 10:36:35 AM IST

Last Updated : 24 Jun 2010 12:42:43 PM IST

ஆரணி, ஜூன் 23: இயற்கை உரம் மூலம் கத்திரி விளைச்சலை அதிகரிக்கச் செய்ய முடியும் என்று ஆரணி வேளாண்மை அதிகாரி செல்வராஜ் கூறினார்.

தற்போது பெரும்பாலான பயிர்களை பூச்சிகள் தாக்குவதால் கெமிக்கல் உரங்களை பயன்படுத்துகின்றனர். பூச்சிகள் அதிகமாக தாக்கினால் உரங்கள் பயன்படுத்துவதை தவிர வேறு வழியில்லை. இந்நிலையில் முடிந்த அளவு இயற்கை உரங்களை பயன்படுத்தினால் பயிர்கள் நன்றாக விளையும்.

ஆரணி அடுத்த நேத்தபாக்கம் கிராமத்தைச் சேர்ந்த குமார் இயற்கை உரத்தை பயன்படுத்தி கத்திரி தோட்டத்தை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் அமோக விளைச்சலை பெற்று வருகிறார்.

இதனால் விவசாயிகள் முடிந்த அளவு இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும் என்றார்.

**தென்னையில் வாடல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 24 Jun 2010 10:36:19 AM IST

Last Updated : 24 Jun 2010 12:42:38 PM IST

தருமபுரி, ஜூன் 23: தருமபுரி மாவட்டத்தில் தென்னை மரங்களை பாதித்து வரும் வாடல் நோயை கட்டுப்படுத்தி தேங்காய் விளைச்சலை அதிகரிக்க விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

இதுகுறித்து தருமபுரி வேளாண் இணை இயக்குநர் மனோகரன் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையத்திற்கு உட்பட்ட சில பகுதியில் 20 முதல் 30 சதவீதம் தென்னை மரங்களில் வாடல் நோய் பாதிப்பு உள்ளது.

பருவமழை தொடங்கியுள்ள இச்சூழலில், தென்னையில் வாடல் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், தேங்காய் விளைச்சல் மற்றும் கிளைகள் காய்ந்து விவசாயிகளுக்கு பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும்.

வாடல் நோய் ஒரு வகையான பூஞ்சணத்தால் ஏற்படக் கூடியது. இதைக் கட்டுப்படுத்த  பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.

நோய் தாக்கிய மரங்களின் கிளைகள், மட்டைகள் ஆகியவற்றை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவு அல்லது மண் பரிசோதனை செய்து உர நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை மரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழு உரம், வேப்பம் பிண்ணாக்கு 5 கிலோ இட வேண்டும். சூடோமோனஸ் புளூரோசென்ஸ் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி 100 கிராமை நோய் தாக்கப்பட்ட மரத்தைச் சுற்றி  இடலாம்.

தாக்கப்பட்ட மரங்களைச் சுற்றிலும் வேர்ப் பாகத்தை நனையும் விதமாக 0.5 சதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலை ஊற்ற வேண்டும் அல்லது கார்பன்டசிம் என்ற ஊடுருவிப் பாயும் பூசணக்கொல்லி 2 மில்லியை 100 மில்லி நீரில் கலந்து (சாய்வாக முனை வெட்டப்பட்ட) வேரில் கட்டிவிட வேண்டும்.

இதுபோன்ற செயல்முறைகளின் மூலம் தென்னை மரங்களை வாடல் நோய் பாதிப்பிலிருந்து விவசாயிகள் பாதுகாத்து கொள்ளலாம் என்றார்.

**தரமான விதையை அறிவது எப்படி?**

First Published : 24 Jun 2010 10:35:49 AM IST

Last Updated : 24 Jun 2010 12:42:26 PM IST

வேலூர், ஜூன் 23: எந்தப் பயிராக இருந்தாலும் தரமான விதைகளை தேர்ந்தெடுப்பது அவசியம். அதன் மூலமே நல்ல விளைச்சலை பெற முடியும்.

தரமான விதையை தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டியவை:

உரிமம் பெற்ற கடைகளில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும். சான்றட்டை, விவர அட்டையில் குறிப்பிட்டுள்ளவற்றை சரி பார்க்க வேண்டும். அதில், பயிர், ரகம், நிலை, குவியல் எண், காலாவதி நாள், இனத்தூய்மை, முளைப்புத் திறன், பருவம், எந்த பகுதிக்கு உகந்தது போன்ற விவரங்கள் சரியாக உள்ளதா எனப் பார்க்க வேண்டும்.

வாங்கும் விதைகளுக்கு உரிய ரசீது பெற வேண்டும். அதில், வாங்குபவரின் பெயர், விலாசம், தேதி, வாங்கிய விதையின் பெயர், ரகத்தின் பெயர், அளவு, விலை, குவியல் எண், காலாவதி மற்றும் வாங்குபவரின் கையொப்பம் இருத்தல் வேண்டும்.

விதை கொள்கலனில் உள்ள விவரங்களும், விற்பனை பட்டியலில் உள்ள விவரங்களும் சரியாக உள்ளனவா எனப் பார்த்து வாங்க வேண்டும்.

விதைப்பதற்கு முன்பு அருகில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளை பரிசோதனை செய்தல் நல்லது. இப்பரிசோதனை செய்வதற்கு ரூ.30 மட்டுமே செலவாகும்.

விதைகள் சம்பந்தமான பிரச்னைகள் இருந்தால் விதைச் சான்றுத் துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என வேலூர் மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குடியாத்தம் நகரில் ஒரு டன் மாம்பழங்கள் பறிமுதல்**

First Published : 24 Jun 2010 10:32:59 AM IST

Last Updated : 24 Jun 2010 12:42:21 PM IST

குடியாத்தம், ஜூன் 23: குடியாத்தம் நகரில் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையில் ரசாயனக் கற்கள் மூலம் பழுக்க வைத்து விற்பனைக்கு வைத்திருந்த சுமார் 1 டன் மாம்பழங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்து அழித்தனர்.

நகராட்சி ஆணையர் ஆர். சுப்பிரமணியன், சுகாதார அலுவலர் சி. ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் சுகாதாரப் பணியாளர்கள் புதன்கிழமை நகரில் உள்ள மாங்காய் மண்டிகளில் திடீர் சோதனை மேற்கொண்டனர். அப்போது சில மண்டிகளில் ரசாயனக் கற்களைப் பயன்படுத்தி மாம்பழங்களை பழுக்க வைத்து விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து சுமார் 1 டன் எடையுள்ள மாம்பழங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்து அழித்தனர்.

ரசாயனக் கற்களைப் பயன்படுத்தி மாம்பழங்களை பழுக்க வைத்த மண்டி உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சிறிய வெங்காயத்தில் அதிக மகசூல் பெற யோசனை**

First Published : 24 Jun 2010 11:12:18 AM IST

Last Updated : 24 Jun 2010 12:24:26 PM IST

பெரம்பலூர், ஜூன், 23: பெரம்பலூர் மாவட்டத்தில் சிறிய வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதிக மகசூல் பெற ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியட்ட செய்திக் குறிப்பு:

தற்போது விவசாயிகள் பயிரிட்டுள்ள வெங்காயமானது 25 முதல் 30 நாள்கள் வயதுடையதாகும். இது மேலுரம் இடுவதற்கு தகுந்த தருணமாகும். எனவே, விவசாயிகள்

தங்களது வயலில்  கைகளால் களை எடுத்து, அதன்மீது மண் அணைத்து ஏக்கர்  ஒன்றுக்கு 26 கிலோ யூரியா உரத்தை 50 கிலோ வேப்பம்  புண்ணாக்குடன் அல்லது 58 கிலோ அம்மோனியம் சல்பேட் உரத்தை மணலுடன் கலந்து தூவ வேண்டும்.

இலை வழி ஊட்டம் அளிப்பதாக இருந்தால் 19:19:19 என்ற நீரில் கரையும் உரத்தை 1 லிட்டர் நீருக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து, காதி சோப்புக் கரைசல் அல்லது ஒட்டும் திரவம் லிட்டருக்கு அரை மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.

இவ்வாறு செய்வதால், சிறிய வெங்காயத்தில் அதிக மகசூல் பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு சான்று விதை உற்பத்திப் பயிற்சி**

First Published : 24 Jun 2010 10:34:29 AM IST

Last Updated : 24 Jun 2010 12:06:41 PM IST

ராமநாதபுரம், ஜூன் 23: முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அப் பகுதி விவசாயிகளுக்கு விதைச் சான்று உற்பத்தி மற்றும் நடைமுறைகள் பற்றிய புத்தூட்டப் பயிற்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இப் பயிற்சியில் முதுகுளத்தூரைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். மாவட்ட விதைச் சான்று உதவி  இயக்குநர் சி. கனகராஜன் பயிற்சியை தலைமை வகித்து துவக்கிவைத்துப் பேசினார். வட்டார துணை வேளாண்மை அலுவலர் ஞானவீரன் முன்னிலை வகித்து, சான்று விதை உற்பத்தியின் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

பரமக்குடி விதைச் சான்று அலுவலர் வெ. முருகேசன் விதைப்புப் பருவம் முதல் சான்றுப் பணிகள் முடியும் வரை மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகள் குறித்து விரிவான பயிற்சியளித்தார்.   விவசாயி சாத்தையா நன்றி கூறினார்.

**தேனீ வளர்ப்பு: காந்தி மியூசியத்தில் பயிற்சி**

First Published : 24 Jun 2010 10:20:54 AM IST

Last Updated : 24 Jun 2010 12:02:17 PM IST

மதுரை, ஜூன் 23: மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் தேனீ வளர்ப்பு சுய வேலைவாய்ப்புப் பயிற்சி வகுப்பு, ஜூன் 28-ல் தொடங்கி ஜூலை 2-ம் தேதி வரை  நடைபெற இருக்கிறது.

இந்த வகுப்புகளில் தேனீ வளர்ப்பு, காளான் சூப், ரெடிமேட் மிக்ஸ், சேமியா, ஓம வாட்டர், பிளோர் கிளீனர், பினாயில், துணி துவைக்கும் பவுடர் தயாரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இந்தப் பயிற்சியில் சேரலாம். மேற்கண்ட நாள்களில் பயிற்சி முடிக்கின்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் காந்தி அருங்காட்சியகத்தின் கல்வி அலுவலர் ஆர்.நடராஜனை நேரிலோ அல்லது 9865791420 செல்பேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்யலாம் என செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானியத்தில் பயறு உற்பத்தி செய்ய அழைப்பு**

First Published : 24 Jun 2010 10:35:20 AM IST

திருவண்ணாமலை, ஜூன் 23: விரைவுபடுத்தப்பட்ட பயறு வகை உற்பத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியம், இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன.

பயறு வகைகளுக்கு எப்போதும் தேவை அதிகம் உள்ளது. குறிப்பாக உளுந்து பயறுக்கு அதிக தேவை உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு விரைவுபடுத்தப்பட்ட பயிறு வகை உற்பத்தி திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உளுந்து பயிரிடுவதற்காக உரம் இலவசமாக தரப்படுகிறது. மேலும் விதைகள் 50 சதவீத மானிய விலையில் தரப்படுகின்றன.

இதுதொடர்பாக வேளாண நேர்முக உதவியாளர் வடமலை கூறியது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பயறு வகை உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.5,000 வரை மானியம் தரப்படுகிறது. 10 கிலோ விதைகள் இலவசமாக தரப்படுகின்றன.

போளூர், கலசப்பாக்கம் ஒன்றியங்களில் 1000 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விரைவில் மற்ற ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் விதைகள், உயிர் உரங்கள், நுண் உரம், இனக்கவர்ச்சி பொறி, ஜிப்சம் உள்ளிட்டவை தரப்படும் என்றார்.

**வளர்ச்சி பாதித்த தென்னை: விஞ்ஞானிகள் ஆய்வு**

First Published : 24 Jun 2010 10:12:37 AM IST

திண்டுக்கல், ஜூன் 23: திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை அருகே நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரத்தை செவ்வாய்க்கிழமை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

வடமதுரை ஊராட்சி ஒன்றியம் காளனம்பட்டியில் தென்னை விவசாயம் செய்து வரும் கதிரியப்பன், தென்னம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமி, இராமகிருஷ்ணன் ஆகியோர் தோட்டத்தில் உள்ள தென்னை மரங்கள் வளர்ச்சி பாதித்து, சரியான காய்ப்பு இல்லாமல் இருந்துள்ளது. இதனை வேளாண் அலுவலர்கள் ஆய்வின் போது கண்டறிந்தனர்.

இதை வேளாண் விஞ்ஞானிகளுக்கு களப் பிரச்சனையாக கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து வேளாண் விஞ்ஞானிகள் ஆர்.ரவிகேசவன், கே.சேதுராமன், ஜி.தீபாகரன், என்.எம். அறிவுடைநம்பி, திண்டுக்கல் வேளாண்மை இணை இயக்குநர் எம்.தெய்வேந்திரன் கொண்ட குழு செவ்வாய்க்கிழமை நேரடியாக ஆய்வு நடத்தி, குறையைப் போக்குவதற்கான தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினர்.

இந்த ஆய்விற்கான ஏற்பாட்டினை வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் பெ.பாஸ்கர், வேளாண் அலுவலர் சின்னச்சாமி, உதவி வேளாண் அலுவலர் பாப்புராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

**பசுமைத் தாயகம் விவசாயிகள் கூட்டமைப்பிற்கு ரூ.45 லட்சம் கடனுதவி**

First Published : 24 Jun 2010 09:16:15 AM IST

Last Updated : 24 Jun 2010 11:54:41 AM IST

ஈரோடு, ஜூன் 23: கூட்டுறவுத் துறை சார்பில் பசுமைத் தாயகம் விவசாயிகள் கூட்டமைப்பிற்கு ரூ.45 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது.

÷ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஆப்பக்கூடல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவு உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கி, மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை தனி அலுவலர் சிவ.முத்துக்குமாரசாமி பேசியது:

ஆப்பக்கூடல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் 14 விவசாயக் கூட்டுறவுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 3 குழுக்கள் இணைந்து, பசுமைத் தாயகம் என்ற கூட்டமைப்பு ஏற்படுத்தி, தங்கள் புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், பவானி ஆற்றிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுக்கும் உரிமையைப் பெற்றுள்ளன.

குழாய்கள் அமைக்கவும், மின் மோட்டார் அமைக்கவும் ரூ.52.60 லட்சம் மத்தியக் காலக் கடன் கோரியதில், ரூ.45 லட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

÷ மீதமுள்ள தொகை கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களின் சேமிப்பிலிருந்து வழங்கப்படும். இதன் மூலம் 54 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும்.

இக்கூட்டமைப்பு உருவாக்க முயற்சி எடுத்த என்.செங்கோட்டையன் பாராட்டுக்குரியவர். விவசாயிகள் இதுபோல் ஒருங்கிணைந்து செயலாற்றினால், பயிர் உற்பத்தி செழிப்படையும் என்றார் அவர்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ப.லோகநாதன் பேசியது: மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு உள்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடந்த 2 ஆண்டுகளில் 1,140 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் தொடங்கப்பட்டு, ரூ.1 கோடி சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது.

÷ மேலும், 973 குழுக்களுக்கு ரூ.15 கோடி பயிர்க் கடனும், 161 குழுக்களுக்கு ரூ.2.53 கோடி மத்திய காலக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 111 புதிய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூ.55 லட்சம் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடனை உரிய தவணைத் தேதிக்கு முன் செலுத்தினால், வட்டியில்லாமல் பயிர்க்கடன் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்றார் அவர்.

கூட்டுறவு துணைப் பதிவாளர் மா.சந்தானம், ஜி.காந்திநாதன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி முதன்மை வருவாய் அலுவலர் சீ.மலர்விழி மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள், கூட்டுறவு சங்கச் செயலர்கள் கலந்து கொண்டனர்.

**மானாவாரிப் பயறு வகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

First Published : 24 Jun 2010 09:08:09 AM IST

Last Updated : 24 Jun 2010 11:52:53 AM IST

சங்ககிரி, ஜூன் 23: கோடை மழையை பயன்படுத்தி மானாவாரியில் பயறுவகைப் பயிர்களான துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகிய பயிர்களை விதைக்க தயாராகவுள்ள விவசாயிகள் ஊட்டமேற்றிய தொழு உரத்தினை அடி உரமாக இட சங்ககிரி வோளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

÷கடைசி உழவில் ஏக்கருக்கு ஐந்து டன் தொழு உரம் இட்டு மானாவாரியில் பயிர்சாகுபடி செய்யும் வழக்கம் மறைந்து வெகுகாலம் ஆகிவிட்டது. ஏனெனில் தொழு உரம் அதிகமாக தயாரிப்பது என்பது எட்டாக்கனியாகிவிட்டது. இருப்பினும் மானாவாரியில் சாகுபடி செய்யும் பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளரவும், அதிக மகசூல் கொடுக்க தேவையான சத்துக்களை அடியுரமிடுவதும் அவசியமான ஒன்றாகும். எனவே தற்பொழுது கிடைக்கக் கூடிய குறைந்த தொழு உரத்துடன் பயிர்களுக்கு தேவைப்படும் சத்துக்களை தரும் இரசாயான உரங்களை கலந்து ஊட்டமேற்றிய தொழு உரமாக தயாரித்து இட வேண்டும்.

ஒரு ஏக்கர் பயறுவகைப் பயிர்களுக்கு அடியுரமிட குறைந்தபட்சம் ஒரு வண்டி மக்கிய தொழு உரத்துடன் 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை நன்கு கலந்து மேடான இடத்தில் குவித்து வைத்து, காற்றுப்புகா வண்ணம் சேறு பூசி மூட்டம் போட்டு வைக்க வேண்டும்.

மக்கிய தொழு உரத்துடன் கலந்துள்ள சூப்பர் பாஸ்பேட் உரமானது வேக வைத்த உணவு போல் நன்கு மக்கி ஊட்டமேற்றிய தொழு உரமாக மாறுகிறது. இந்த ஊட்டமேற்றிய தொழு உரத்துடன் ஏக்கருக்கு 12 கிலோ யூரியா கலந்து பயறுவகை விதைக்கும் முன் விதைப்பு சாலில் சீராக இட வேண்டும். இவ்வாறு அடியுரமாக இடுவதால் மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை சுடாமல் காப்பதுடன், அதிக வேர்கள் வளர்ந்து மண்ணில் உள்ள ஈரத்தை பயிர்களுக்கு எடுத்துக் கொடுப்பதால் வறட்சியைத் தாங்கி பயிர் நன்கு வளர்வதுடன் அதிக மகசூல் கிடைக்கும்.

மேலும் மானாவாரியில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும் போது விதை விதைக்கும் கருவியை பயன்படுத்தி விதைப்பு செய்வதுடன் பயிர் எண்ணிக்கையை சரியாக பராமரிக்க வேண்டும். ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற நுண்ணுயிர் உரங்களுடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஏக்கருக்கு 50 கிலோ ஜிப்சம் அடியுரமிட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45வது நாட்களில் மழை பெய்து போதிய ஈரம் இருக்கும்போது 2 சதவீதம் டிஏபி உரக்கரைசல் தெளிக்க வேண்டும்.

இந்த தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெற விவசாயிகளை வேளாண் உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விவசாயிகள் விவரங்கள் இணைய தளத்தில் பதிவு**

First Published : 24 Jun 2010 09:12:42 AM IST

Last Updated : 24 Jun 2010 11:52:57 AM IST

திருச்செங்கோடு, ஜூன் 23: திருச்செங்கோடு வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் பற்றிய அடிப்படை புள்ளி விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் இதற்கான விவரங்கள் சேகரிப்பு பணியில் உதவி வேளாண் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். வேளாண்துறையின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தவும், அனைத்து விவரங்களையும் ஒருங்கிணைத்து திட்டமிடவும் இந்த அடிப்படை புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன.

புள்ளிவிவர சேகரிப்பு பணிக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ராதாமணி கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கான படிவததை பூர்த்தி செய்து அளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**50 சத மானியத்தில் காய்கறி விதை, பழச்செடிகள்**

First Published : 24 Jun 2010 09:07:21 AM IST

Last Updated : 24 Jun 2010 11:52:46 AM IST

நாமக்கல், ஜூன் 23: ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 50 சத மானியத்தில் காய்கறி விதைகள், பழச் செடிகள் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் பி. அசோகன் தெரிவித்துள்ளார்.

÷நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரத்துக்குட்பட்ட விவசாயிகளுக்காக பவித்திரம் கிராமத்தில் அடிப்படை பயிற்சி வகுப்பு நடந்தது.

இப் பயிற்சி வகுப்பை உழவர் பயிற்சி நிலைய உதவி இயக்குநர் இரா. சுப்ரமணியம் துவக்கி வைத்தார்.

தோட்டக்கலைத்துறை மானியத்திட்டங்கள் குறித்து உதவி இயக்குநர் பி. அசோகன் கூறியது:

÷நுண்நீர் பாசனத் திட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு 65 சதம் மானியம் வழங்கப்படுகிறது.

ஆத்மா திட்டத்தின் கீழ் வயல்களில் செயல்விளக்கத் திடல் அமைக்க ரூ. 4 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. காய்கறிகள், பழச்செடிகள் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு 50 சத மானியத்தில் பழச்செடிகள், காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், தேசிய மூலிகைப் பயிர் இயக்கத் திட்டத்தில் நெல்லி, வேம்பு, கற்றாழை, சர்க்கரைக் கொல்லி, கூர்க்கன் கிழங்கு, புதினா, துளசி, கீழாநெல்லி ஆகிய பயிர்களுக்கு 20 சதம் மானியம், கண்வழிக்கிழங்கு சாகுபடி செலவினத்துக்கு 50 சதம் மானியம், சிவப்பு சந்தன சாகுபடி செலவுகக்து 75 சதமானியம் வழங்கப்படுகிறது. ÷இந்த பயிர்கள் சாகுபடி செய்ய தேசிய வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றிருக்க வேண்டும்.

அரசு வழங்கும் மானியத் தொகையானது நேரடியாக விவசாயி கடன் பெற்ற வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

÷எனவே, நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் இத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என பி. அசோகன் அழைப்பு விடுத்துள்ளார்.

**செயற்கை முறையில் பழுக்க வைத்த பழங்கள்: ஆணையர் எச்சரிக்கை**

First Published : 25 Jun 2010 09:19:36 AM IST

கடலூர்,ஜூன்.24: கார்பைடு கற்கள் மூலம் செயற்கை முறையில் பழுக்க வைத்த பழங்களை விற்பனை செய்தால், பழங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் விற்பனையாளர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்று கடலூர் நகராட்சி ஆணையர் எச்சரிக்கை விடுத்தார்.

÷ஆணையர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷கடலூர், நகராட்சிப் பகுதியில் சில பழ வியாபாரிகள், வணிக நோக்குடன் மாம்பழங்கள், வாழைப் பழங்கள் போன்றவற்றை லாப நோக்குடன் கார்பைடு கற்களைக் கொண்டு செயற்கை முறையில் பழுக்க வைத்து, விற்பனை செய்வதாகத் தெரிய வருகிறது.

இதுபோலே செயற்கை முறையில் பழுக்க வைக்கும் பழங்களை உட்கொள்வது, உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும். எனவே இதுபோன்ற தவறுகள் ஆய்வில் கண்டறியப் பட்டால், சம்பந்தப்பட்ட பழ வியாபாரியிடம் இருந்து பழங்கள் பறிமுதல் செய்யப்படும். மேலும் அந்த வியாபாரி மீது, பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

செயற்கை முறையில் பழுக்க வைக்கும் பழங்கள், மேற்புறத்தில் வெள்ளை மற்றும் சாம்பல் நிறத்தில் பெப்டர் படிந்தது போல் காணப்படும். பொதுமக்கள் இதுபோன்ற பழங்களைக் கண்டறிந்து உடல்நலத்தைக் காத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

தினமலர்

**கால்வாய்களை தூர்வார கோரிக்கை**

செங்கல்பட்டு : பொன்விளைந்த களத்தூர் ஏரி பாசனக் கால்வாய்களை தூர்வார வேண்டுமென ஏரி நீர் பயன் பெறுவோர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இங்குள்ள பெரிய ஏரியில் மழைக்காலத்தில் தேங்கும் தண்ணீர் மதகு மூலம் பெரிய கால்வாய்க்கு வெளியேற்றப்படுகிறது. பெரிய கால்வாயிலிருந்து 12 உபகால்வாய்கள் மூலம் 2 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்கு நீர் பாய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இக்கால்வாய்களை விவசாயிகளே தூர்வாரி வந்ததால், பாசனக் கால்வாயில் தண்ணீர் தடையின்றி சென்றது. விவசாய நிலங்கள் பயன் பெற்றன.

கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகளால் கால்வாய்களை தூர்வார முடியவில்லை. இதனால் கால்வாய்கள் தூர்ந்துள்ளன. ஏரியில் தண்ணீர் இருந்தும் முழுமையான தண்ணீரை நிலங்களுக்கு பாய்ச்ச முடியவில்லை. இதனால் கதிர் முற்றும் நேரத்தில் பயிர் கருகி விவசாயிகள் நஷ்டம் அடையும் நிலை ஏற்படுகிறது.

எனவே அரசு அளிக்கும் நீர்ப்பாசன சேவை திட்டம் ஏதேனும் ஒன்றின் மூலம் ஏரி கால்வாயை தூர்வாரி விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டுமென, ஏரி நீர் பயன் பெறுவோர் சங்கத்தலைவர் பெருமாள், செயலர் சண்முகம் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**காஞ்சியில் நல்ல மழை**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது.காஞ்சிபுரத்தில் இரவு பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 7 மணி நிலவரப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக திருக்கழுக்குன்றத்தில் 84.2 மில்லி மீட்டர் மழை பதிவானது. அடுத்தபடியாக செய்யூரில் 35, மதுராந்தகத்தில் 27, உத்திரமேரூரில் 18, காஞ்சிபுரத்தில் 5, தாம்பரத்தில் 3, செங்கல்பட்டில் 2 மில்லி மீட்டர் மழை பதிவானது. ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் மழை இல்லை.

செய்யூர்: சூணாம்பேடை ஒட்டியுள்ள காவனூர், அகரம், அரசூர், மாம்பாக்கம், வன்னியநல்லூர், வெண்ணந்தல், சூணாம்பேடு உள்ளிட்ட பகுதிகளில் கோடைக்காலம் முடிந்தும் வெயிலின் தாக்கம் குறையாமலிருந்தது. நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு வானில் திடீர் கருமேகங்கள் சூழ்ந்தது. சிறிது நேரத்தில் இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது. அரைமணி நேரம் பெய்த மழை விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**பழ வியாபாரிகளுக்கு கமிஷனர் எச்சரிக்கை**

கடலூர் : "கார்பைட்' கற்கள் மூலம் மா, வாழையை பழுக்க வைத்து விற் பனை செய்யும் வியாபாரிகள் மீது பொது சுகாதார சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படும் என கமிஷனர் எச்சரித்துள்ளார்.இது குறித்து கடலூர் நகராட்சி கமிஷனர் குமார் விடுத்துள்ள செய்தி குறிப்பு:கடலூர் நகராட்சி பகுதியில் சில பழ வியாபாரிகள் வணிக நோக்கத்துடன் மாம் பழம் மற்றும் வாழைப் பழங்கள் இயற்கை முறையில் கனிவதை தவிர்த்து லாபம் ஈட்டும் நோக்கில் "கார்பைட்' கற்கள் மூலம் செயற்கை முறையில் பழுக்க வைத்து அதனை விற்பனை செய்வது தெரிய வருகிறது. பழங்களை செயற்கை முறையில் பழுக்க வைத்து சாப்பிடுவது உடல் நலத் திற்கு கேடு ஏற்படுத்தும்.
இது போன்ற தவறுகள் ஆய்வில் கண்டறியப்பட் டால் சம்மந்தப் பட்ட பழ வியாபாரிகளிடம் இருந்து பழங்கள் பறிமுதல் செய்து, அவர்கள் மீது பொது சுகாதார சட்டம் 1993ன் கீழ் கோர்ட்டில் வழக்கு தொடரப்படும்.
மேலும் செயற்கை முறையில் பழுக்க வைத்த பழங்களின் மேல் பகுதியில் வெள்ளை நிறத்தில் சாம்பல் நிற பவுடர் படிந்தது போல் இருக்கும். பொது மக்கள் இதுபோன்ற பழங்களை தவிர்க்க வேண்டும். இவ்வாறு கமிஷனர் விடுத்த செய்திக் குறிப்பில் கூறப் பட்டுள்ளது.

**புயலால் பாதித்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு கோரி உண்ணாவிரதம்**

மன்னார்குடி: நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத்தொகை வழங்கக்கோரி கோட்டூரில் விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். மன்னார்குடி அடுத்த கோட்டூரில் கடந்த 2008 - 09ம் ஆண்டில் தாக்கிய நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு தொகை வழங்கக்கோரி கோட்டூர் கூட்டுறவு தொடக்க வேளாண் வங்கி அருகே விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர். நிஷா புயலால் பாதிக்கப்பட்ட கோட்டூர் கோட்டத்தில் 37 விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை வழங்காததைக் கண்டித்து விவசாயி மோகன் தலைமையில் பிச்சையன் முன்னிலையில் விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்தனர்.

தகவலறிந்த தஞ்சை தொடக்க வேளாண் கூட்டுறவு அதிகாரி பிச்சைமுத்து தனி அலுவலர் கருணாகரன் கள அலுவலர் பன்னீர்செல்வம் பேச்சு நடத்தினார். அதன் பின் அதிகாரிகள் கூறியதாவது: விடுபட்ட 37 விவசாயிகளில் 22 விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்கிறோம். மீதமுள்ளோர்கள் அவர்களது பெயர்கள் இரண்டு இடங்களில் பதிவாகி உள்ளதால் ஆர்.டி.ஓ. விசாரித்த பின்னர்தான் நிவாரணம் வழங்குவது குறித்து பதில் கூற முடியும்.இவ்வாறு அவர்கள் கூறினர். இதனால் விவசாயிகள் 37 பேருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் எனக்கோரி வாக்குவாதம் செய்து உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்தனர். உண்ணாவிரதத்துக்கு கோட்டூர் போலீஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

**மரவள்ளிக்கு விலை கிடைக்காததால் மலைகிராம விவசாயிகள் ஏமாற்றம்**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே மலைப்பகுதியில் பயிரிடப்பட்ட மரவள்ளி கிழங்குக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காததால், மலைகிராம விவசாயிகள் ஏமாற்றத்தால் கவலையடைந்துள்ளனர். ஆத்தூர் அருகே உள்ளி வெள்ளிமலை, கருமந்துறை, பகடுபட்டு, பட்டிமேடு, மண்ணூர், சடையம்பட்டி, கல்லூர், பட்டிவலவு, ஆவாரை, சேம்பூர் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட மலைகிராமத்தில் மலை சரிவில் பணப்பயிரான மரவள்ளியை விவசாயிகள் கடந்தாண்டு ஜூலை, ஆகஸ்ட்டில் நடவு செய்தனர். தற்போது அறுவடை பணியை துவக்கியுள்ளனர். மரவள்ளி கிழங்கை ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ள சேகோ ஆலைக்கு கமிஷன் புரோக்கர் மூலம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

மலைப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளிக்கு அதிக மாவு சத்து இருப்பதால் கமிஷன் வியாபாரிகள் போட்டி போட்டு மரவள்ளி கிழங்கை கூடுதல் விலை கொடுத்து வாங்கி செல்வர். இந்நிலையில், ஆத்தூர் பகுதியில் உள்ள 124 சேகோ ஆலையில் தற்போது எட்டுக்கும் மேற்பட்ட சேகோ ஆலைகள் மட்டுமே மரவள்ளி கிழங்கை அரவை செய்து வருகின்றன. விவசாயிகளிடம்

சேகோ ஆலை உரிமையாளர்கள் டன் பாயின்ட் 290 ரூபாய்க்கு விலைக்கு வாங்குகின்றனர். மரவள்ளி 20 பாயின்ட் முதல் 21 பாயின்ட் கொண்ட மூட்டை 429 ரூபாயிலிருந்து 450 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. அதில் தூரத்தை கணக்கிட்டு வண்டி வாடகை, ஆட்கள் கூலி உள்ளிட்ட செலவுகள் போக மூட்டைக்கு 390 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை அதிகப்பட்சமாக விலை கிடைக்கிறது.

மூன்று மாதங்களுக்கு முன் குங்குமரோஸ், முள்ளுவாடி, ரோஸ் ஆகிய மரவள்ளி கிழங்கு மூட்டை அதிக விலையாக 650 ரூபாய் வரை விற்றது. ஆனால், மலைப்பகுதியில் பயிரிட்ட மரவள்ளி கிழங்கு மூட்டை 700 ரூபாயை தாண்டி கூடுதல் விலைக்கு விற்கும் என எதிர்பார்த்த மலைகிராம விவசாயிகளுக்கு, விலை சரிந்து வருவதால் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஸ்டார்ச், ஜவ்வரிசி கூடுதல் விலைக்கு விற்றதால் சேகோ ஆலை முதலாளிகள், கமிஷன் வியாபாரிகள் இருப்பு வைத்தனர். அதன் எதிரொலியால் தற்போது மலைப்பகுதியில் அறுவடை செய்யும் மரவள்ளி கிழங்குக்கு உரிய விலை கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும், பச்சமலை, கொல்லிமலை ஆகிய பகுதியில் மரவள்ளி அறுவடை சீஸன் துவங்க உள்ள நிலையில், மரவள்ளி கிழங்குக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காதது மரவள்ளி விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி: திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (25ம் தேதி) காலை 10.30 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் (பொ) தட்ஷிணாமூர்த்தி தலைமையில் நடக்கிறது. கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று, நீர்ப்பாசனம், வேளாண் இடுபொருள், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுதவி, விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டம் மற்றும் வேளாண் தொடர்புடைய கடனுதவி குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். விவசாயப் பெருங்குடிமக்கள் இவ்வாய்ப்பினை நல்லமுறையில் பயன்படுத்திகொள்ளுமாறு கலெக்டர் (பொ) தட்ஷிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலை பயிற்சி**

ஈரோடு: பெருந்துறை சுற்று வட்டாரத்தை சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 50 விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்த மூன்று நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக்கலை

உதவி இயக்குனர் அண்ணாதுரை வரவேற்றார். யூனியன் தலைவர் திருநாவுக்கரசு துவக்கி வைத்தார். தொழில்நுட்ப அலுவலர் மோகன், வேளாண் பொறியியல் துறை பொறியாளர் பாரதி, தோட்டக்கலை உதவி இயக்குனர் அழகேசன் ஆகியோர் பேசினர்.

**கருப்பட்டி விலை ரூ.1.90 குறைவு**

கோபிசெட்டிபாளையம்: குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்தில் தென்னை மற்றும் பனை கருப்பட்டி விலை குறைந்தது.

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்தில் திங்கள் கிழமை தென்னை மற்றும் பனை கருப்பட்டி ஏலம் நடந்து வருகிறது. கோபி, குன்னத்தூர், நம்பியூர், பெருந்துறை, பங்களாப்புதூர், சிறுவலூர், கடத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கருப்பட்டி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு வருகிறது. கடுமையான கோடை வெப்பம், போதிய மழை இல்லாத காரணத்தால் கருப்பட்டி உற்பத்தி குறைந்துள்ளது. நடப்பு வாரம் குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்துக்கு 11 ஆயிரம் கிலோ தென்னை கருப்பட்டி விற்பனைக்கு வந்தது. கடந்த வாரத்தை விட 1,000 ஆயிரம் கிலோ அதிகமாக வந்தது. ஒரு கிலோ தென்னை கருப்பட்டி அதிகபட்சமாக 46 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரத்தை விட ஒரு ரூபாய் 90 காசு குறைந்திருந்தது. ஐந்து லட்சத்து 6,000 ரூபாய்க்கு விற்றது. பனை கருப்பட்டி 2,000 கிலோ விற்பனைக்கு வந்தது. கிலோ 55.90 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைந்தது. ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 800 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. வரத்து குறைந்த போதும், பனை மற்றும் தென்னை கருப்பட்டிக்கு தேவை குறைந்துள்ளதால், விலையும் கிலோவுக்கு சராசரியாக ஒரு ரூபாய் வரை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயத்துக்கு 14 மணி நேரம் மும்முனை மின்சாரம் விநியோகம்**

தஞ்சாவூர்: "டெல்டா மாவட்ட விவசாயத்துக்கு 14 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது' என தஞ்சை மின்வாரிய மேற்பார்வை பொ றியாளர் தங்கராஜூ தெரிவித்தார். டெல்டா பகுதியில் குறுவை சாகுபடிக்காக தினமும் ஒன்பது மணி நேரம் வழங்கப்பட்டு வந்த மும்முனை மின்சார விநியோகம் தற்போது 14 மணி நேரமாக உயர்த்தப்படுகிறது. இதன்படி பகலில் 11 மணி நேரமும் இரவில் மூன்று மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படும். இந்த மாற்றம் கடந்த 18ம் தேதி முதல் அமல்படுத்தப்படுகிறது. குறுவை சாகுபடி முழுமைக்கும் 14 மணி நேரம் மும்முனை மின்சாரம் விநியோகம் தொடர்ந்து வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

**கெண்டை மீன் வளர்ப்பு பயிற்சி: ஜூன் 28ல் துவக்கம்**

தஞ்சாவூர்: தஞ்சை நாஞ்சிக்கோட்டை ரோட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூன் 28 முதல் 30ம் தேதி வரை கெண்டை மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி நடக்க உள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்கள் "பேராசிரியர் மற்றும் தலைவர் கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மையம் பால் பண்ணை வளாகம் நாஞ்சிக்கோட்டை ரோடு தஞ்சாவூர் - 613 006' என்ற முகவரியில் வரும் 28ம் தேதி காலை பத்து மணிக்குள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டு பயிற்சியில் பங்கேற்கலாம். இத்தகவலை மைய பேராசிரியர் புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

**வேளாண் மையத்தில் குறைகேட்பு பதிவேடு உதவி இயக்குனர் தகவல்**

நாமக்கல்: "புதுச்சத்திரம் வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் குறைகேட்பு பதிவேடு வைக்கப்பட்டுள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் சித்ரா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: புதுச்சத்திரம் வட்டாரத்தில் வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசின் திட்டங்கள், புதிய தொழில் நுட்ப செயலாக்கம் செய்யப்படுகிறது. நவீன வேளாண் மற்றும் மானியத் திட்டங்களில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் பதிவேடு வைக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பதிவேட்டில் விவசாயிகள் தங்களது பிரச்னை, குறை, தேவை குறித்து பதிவு செய்து கொள்ளலாம். வேளாண் துறை அலுவலர்கள் சம்மந்தப்பட்ட விவசாயிகளை நேரில் அழைத்து அக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பர்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் மானிய விலையில் காய்கறி விதை வழங்கல்**

நாமக்கல்: ""ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள் மற்றும் பழச்செடிகள் வழங்கப்படுகின்றன,'' என, வேளாண் உதவி இயக்குனர் அசோகன் கூறினார். எருமப்பட்டி யூனியனுக்கு உட்பட்ட பவித்தரம் கிராமத்தில் கிராம அடிப்படை பயிற்சி முகாம் நடந்தது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தலைமை வகித்து பயிற்சி முகாமை துவக்கி வைத்தார். உதவி இயக்குனர் அசோகன் பேசியதாவது: ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள் மற்றும் பழச்செடிகள் வழங்கப்படுகின்றன. நுண் நீர் பாசனத் திட்டத்தில் 65 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கலாம். ஆத்மா திட்டத்தின் கீழ் செயல்விளக்க திடல் அமைக்க 4,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய மூலிகைப் பயிர் இயக்கத் திட்டத்தில் மூலிகைப் பயிர்களான நெல்லி, வேம்பு, கற்றாழை,

சர்க்கரைக் கொல்லி, கூர்கன் கிழங்கு, புதினா, துளசி, கீழா நெல்லி ஆகிய பயிர்களுக்கு 20 சதவீதம் அரசு மானியமும், கண்விழிக் கிழங்குக்கு சாகுபடி செலவில் 50 சதவீதம் மானியமும் வழங்கப்படும். அதுபோல் சிவப்பு சந்தனத்துக்கு சாகுபடி செலவில் 75 சதவீதம் மானியம் வழங்கப்படும். இப்பயிர்கள் பயிரிடுவதற்கு தேசிய வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றிருக்க வேண்டும். அரசு வழங்கும் மானியம் நேரடியாக விவசாயிகள் பயிர்க்கடன் பெற்ற வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த ஆண்டில் ஆத்மா திட்டத்தில் 4,000 ரூபாய் மதிப்பில் பூமணி என்ற விவசாயிக்கு பழச்சாறு பிழியும் கருவி வழங்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பங்குபெற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். மேலும், வேளாண்துறை மானியத் திட்டம் குறித்தும் பயிற்சிக் கூட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டது. விதை நேர்த்தி செயல்விளக்கமும் கூட்டத்தில் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி, துணை வேளாண் அலுவலர் பசுபதி, வேளாண் அலுவலர்கள் ஜெயக்குமார், கென்னடி, கால்நடை உதவி டாக்டர் சிவப்பிரகாசம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**நெல் வினியோகம், சாகுபடி, பயிர் பாதுகாப்புக்கு ரூ. 60 லட்சம் ஒதுக்கீடு**

மதுரை : மதுரை மாவட்டத்தில் நெல் பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிக்க நெல் வினியோகம், செம்மை நெல் சாகுபடி, ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்புக்கு மானியம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் நல்ல தரமான விதையை பெற்று பயிர்செய்ய மானியம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. விவசாய விரிவாக்க மையங்கள் மூலம் நெல் விதை கிலோவுக்கு ரூ. 5 மானியம் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 550 மெட்ரிக் டன் விதைகள் மானியமாக வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. செம்மை நெல் சாகுபடிக்கு செயல் விளக்கத்தில் ரூ. 3000 முழுமானியமாக வழங்கப்படுகிறது. இதில் சாகுபடிக்கு தேவையான விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்திற்கு இந்த ஆண்டுக்கு 900 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் வேதியியல் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை குறைக்க ஒருங்கிணைந்த பூச்சி நோய் கண்காணிப்பு திடல்கள் (100 ஏக்கருக்கு) அமைக்க தலா ரூ. 17ஆயிரம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் 30 திடல்கள் அமைக்க ரூ. 5 லட்சத்து 10 ஆயிரம் மானியமாக வழங்கப்பட உள்ளது. மேற்கண்ட மூன்று வகைக்கும் ரூ. 59 லட்சத்து 60 ஆயிரம் மானியமாக வழங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கலெக்டர் காமராஜ் கூறியுள்ளார்.

---

**வெங்காய சாகுபடி பணி துவக்கம்**

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவி., சுற்றுவட்டார பகுதிகளான பிள்ளையார்நத்தம், பூவாணி, மீனாட்சிபுரம், வலையப் பட்டி, குன்னூர் பகுதிகளில் விவசாயிகள் கிணற்றில் உள்ள ஓரளவு தண்ணீரை கொண்டு வெங்காயம் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து சவுந்தரராஜ் கூறியதாவது: வெங் காயம் ஆகஸ்ட் மாதம் விளைந்து விடும். தற் போது வெங்காயம் விலை குறைவாக இருந்தாலும் விளைந்து வரும் போது விலை அதிகம் கிடைக்கும் என்ற எதிர் பார்ப்பில் நடவு செய்து வருகிறோம், என்றார்.

**இடைச்சி விளையில் குளம் அமைக்க விவசாயிகள் சங்கம் அரசுக்கு கோரிக்கை**

பெரியதாழை : தட்டார்மடம் அருகேயுள்ள அரசூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த இடைச்சிவிளை தேரியில் குளம் வெட்டவேண்டும் என்று அரசுக்கு வட்டார விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.சாத்தான்குளம் வட்டார விவசாய சங்க செயற்குழு கூட்டம் வட்டாரத் தலைவர் வேலுச்சாமி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் இடைச்சிவிளை தேரியில் குளம் வெட்டக் கோரியும், தட்டார்மடம் அருகேயுள்ள திருப்பணி புத்தன்தருவை மற்றும் கொம்மடிக் கோட்டை கிராமங்களில் 900 ஏக்கர் நீர்ப்பிடிப்பு பகுதியாக அமைந்துள்ள புத்தன் தருவைகுளத்தின் கø ரயை உயர்த்தி அமைத்து வடிகால் வசதிகளை செய்யக் கோரியும், ரூ.369 கோடி செலவில் நதிநீர் இணைப்புத் திட்டத்தின் மூலம் சாத்தான்குளம் வரை 76கி.மீ. தொலைவிலான வெள்ளக்கால்வாய் பணியினை துரிதப்படுத்தக் கோரியும், பால் விலையை உயர்த்தித் தரக் கோரியும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் சங்கத்திற்கு ஆயிரம் உறுப்பினர்களை சேர்க்க முடிவு செய்யப்பட்டது.மேலும் கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கம் சார்பில் போராட்டங்கள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் வட்டார அளவிலான விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

***உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.90%–ஆக உயர்வு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஜூன் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 16.90 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 16.12 சதவீதமாக இருந்தது.*
*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள், நறுமண பொருள்கள், குறிப்பிட்ட சில பருப்பு வகைகள் போன்றவற்றின் விலை அதிகரித்திருந்தது. குறிப்பாக, காய்கறிகள் விலை 8.06 சதவீதம் உயர்ந்திருந்தது. மேலும், ஊறுகாய் மற்றும் நறுமண பொருள்கள் (தலா 3 சதவீதம்), உளுந்து, கடலை பருப்பு, தேயிலை (தலா ஒரு சதவீதம்) ஆகியவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.*
*அதேசமயம், ஆட்டு இறைச்சி (2%), கடல் மீன்கள் மற்றும் துவரம் பருப்பு (தலா ஒரு சதவீதம்) ஆகியவற்றின் விலை குறைந்திருந்தது.மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற மே மாதத்தில் 10.16 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்திருந்தது. நடப்பு ஆண்டு மார்ச் மார்ச் மாதத்தில், நாட்டின் பணவீக்க விகிதம் முதலில் 9.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருந்தது. இது, மறு மதிப்பீட்டின்படி 11.04 சதவீதமாக அதிகரித்துள்ளது.பணவீக்க விகிதம் தொடர்ந்து அதிகரிக்கும் நிலையில், பாரத ரிசர்வ் வங்கி, முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை மேலும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## *லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம்: பச்சை தேயிலை விலை மேலும் சரியும் அபாயம் சிறு விவசாயிகள் கலக்கம்*

*குன்னூர், ஜூன்.25–*
*குன்னூரில் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் காரணமாக பச்சை தேயிலை விலை மேலும் வீழ்ச்சி அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.*
*தேயிலை ஏலம்*
*நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள தேயிலை ஏல மையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகர்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து செல்கிறார்கள்.*
*விற்பனை செய்யப்பட்ட தேயிலை தூள் குன்னூரில் உள்ள 50 தேயிலை குடோன்*

களில் இருப்பு வைக்கப்பட்டு, மற்ற மாநிலங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. மேலும் ஏற்றுமதிக்காக துறைமுகங் களுக்கும் லாரிகள் மூலம் தேயிலை தூள் கொண்டு செல்லப்படுகிறது.

லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம்

குன்னூரிலிருந்து தேயிலை தூள் கொண்டு செல்ல சுமார் 25 லாரிகள் இயங்குகின்றன. இது தவிர கோவை– மேட்டுப்பாளை யம் போன்ற வெளியூர் லாரிகளும் தேயிலை பாரம் கொண்டு செல்ல வாடகைக்கு அமர்த்தப்படுகிறது.

இந்த நிலையில் தேயிலை பாரம் கொண்டு செல்லும் லாரிகளுக்கு வாடகையை அதிகரித்து தர வேண்டும் என்று கோரி லாரி உரிமை யாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் ரூ.35 கோடி மதிப்பிலான 70 லட்சம் கிலோ தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. லாரி உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் நேற்று 3–வது நாளாக நீடித்தது.

பேச்சுவார்த்தை

இந்த வார தேயிலை உற்பத்தியும் கடந்த 23–ந் தேதியுடன் முடிவடைந்தது. இந்த தேயிலை தூள்களும் குடோன்களுக்கு வரத்து தொடங்கி உள்ளன. இதனால் தேக்கமடையும் தேயிலை தூளின் அளவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. கோவையில் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறுவதால் அரசு அதிகாரிகள் கோவை சென்று விட்டனர். இதனால் லாரி உரிமையாளர்கள் மற்றும் சாலை போக்குவரத்து சங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்த இயலாத நிலை உள்ளது.

கடந்த சில மாதங்களாக தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாலும், ஏல மையத்தில் விற்பனை ஆகாமல் தேக்கம் அடைந்து விடுவதாலும் பச்சை தேயிலையின் விலை அதல பாதாளத்துக்கு சென்று கொண்டு உள்ளது.

விவசாயிகள் கலக்கம்

லாரிகள் வேலை நிறுத்தத்தால் தேயிலையின் விலை மேலும் குறைவடையும் நிலை உள்ளது. இதனால் சிறு விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இது குறித்து சிறு தேயிலை விவசாயி ஒருவர் கூறியதாவது:–

ஏற்கனவே மகசூல் அதிகரிப்பு காரணமாக பச்சை தேயிலை விலை கடுமையாக குறைந்துள்ளது. தொழிற் சாலைகள் பச்சை தேயிலையை சரிவர வாங்குவது இல்லை. இந்த நிலையில் தேயிலை பாரம் ஏற்றும் லாரிகளின் வேலை நிறுத்தத்தால் மேலும் பச்சை தேயிலையின் விலை கடுமையாக சரியும் அபாயம் உள்ளது.

தேயிலை தொழிலை பொறுத்த வரை எந்த பிரச்சினை ஏற்பட்டாலும் கடைசியில் கடுமையாக சிறு தேயிலை விவசாயிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள். தற்போதுள்ள பச்சை தேயிலை விலையை கொண்டு கூலி கொடுப்பதா? தோட்டத்தை பராமரிப்பதா? அன்றாட வாழ்க்கை தேவையை பூர்த்தி செய்வதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

முடிவுக்கு வருமா? வேலை நிறுத்தம்

சிறு தேயிலை விவசாயி களை காப்பாற்ற யாரும் முன்வருவது இல்லை. இந்த நிலையில் தேயிலை பாரம் ஏற்றி செல்லும் லாரிகள் வேலை நிறுத்தம் என்பது துரதிஷ்டவசமானது. எனவே அரசு அதிகாரிகள் உடனடியாக இந்த பிரச்சினையில் தலையிட்டு லாரிகள் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

*இவ்வாறு அவர் கூறினார்.*

*லாரி உரிமையாளர்கள் போராட்டம் நீடிப்பதால் லட்சக்கணக்கான கிலோ தேயிலை தூள்கள் தேக்கம் அடைந்து வருகிறது.*

## கூடலூர் பகுதியில் பரவலாக மழை பெய்தாலும் போதிய மகசூல் இல்லாததால் கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு தேயிலை வரத்து குறைவு



கூடலூர் பகுதியில் பரவலாக மழை பெய்தாலும் தேயிலை மகசூல் போதிய அளவு அதிகரிக்காமல் உள்ளது.

*கூடலூர், ஜூன்.25–*

*கூடலூர் பகுதியில் பரவலாக மழை பெய்தாலும் போதிய மகசூல் இல்லாததால் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேயிலை வரத்து குறைந் துள்ளது. இதனால் தேயிலை தூள் உற்பத்தி மந்த நிலையில் உள்ளது.*

*பரவலாக மழை*

*கூடலூர் பகுதியில் தென் மேற்கு பருவமழை தொடங்கி னாலும் எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் சரிவர மழை பெய்ய வில்லை. கடந்த வாரம் நல்ல மழை பெய்த நிலையில் பின்னர் படிப்படி யாக வெயில் அடிக்க தொடங் கியது. இருப்பினும் கூடலூர் நகர பகுதியை தவிர புறநகர் பகுதிகளிலும், பந்தலூர் தாலு காவிலும் பரவலாக மழை பெய்தது.*

*இதனால் தேயிலை மகசூல் அதிகரிக்கும் என எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் தேயிலை மகசூலும் எதிர்பார்த்த அளவுக்கு கிடைக்க வில்லை. இதுதவிர தேயிலை விலை குறைந்து உள்ளதால் விவசாயி களும் அதிக அக்கறை செலுத் தாமல் உள்ளனர். கூடலூர் பகுதியில் பரவலாக மழை பெய்த நிலையில் தேயிலை மகசூல் அதிகரிக் காததால் கூட்டுறவு தொழிற் சாலை களுக்கு பச்சை தேயிலை வரத்து குறைந்துள்ளது.*

*மகசூல் குறைவு*

இதேபோல் பந்தலூர் கூட்டுறவு தொழிற்சாலை களிலும் பச்சைதேயிலை வரத்து குறைந்துள்ளது. பரவலான மழை, வெயில் என மாறி வரும் காலநிலையால் தேயிலை மகசூல் இனிவரும் காலங்களில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது தேயிலை வரத்து குறைந்துள்ளதால் கூட்டுறவு தொழிற்சாலைகளில் தேயிலை தூள் உற்பத்தி மந்தமாக உள்ளன.

இதுகுறித்து கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தொழிற் சாலை மற்றும் பந்தலூர் கூட் டுறவு தேயிலை தொழிற்சாலை தனி அலுவலர் கல்யாண சுந்தரம் கூறியதாவது:–

கடந்த வாரங்களில் பச்சை தேயிலை வரத்து குறைவாக இருந்தது. இதனால் மாவட் டத்தின் இதர பகுதிகளில் இருந்து பச்சை தேயிலை கொண்டு வரலாம் என பரிசீலிக்கப்பட்டது. பின்னர் அந்த முடிவும் கைவிடப்பட் டது. இப்போது தான் மழை பெய்ய தொடங்கி உள்ளதால் இனி வரும் காலங்களில் தேயிலை மகசூல் அதிகரித்து தொழிற் சாலைக்கு பச்சை தேயிலை வரத்து அதிக ரிக்கும் என எண்ணுகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.